# திருநாரணன் திருவந்தாதி



**ரங்கநாயிகா சமேத ரங்கநாத பரப்ரஹ்மணே நம :**

மண்மடந்தை மலர்மடந்தை இருபாலும் திகழ்ந்துறைய
தம்மடிகள் அடைந்தவரின் துயர்துடைத்து அருளுரைக்கும்
நம்முடைய நம்பெருமான் நீளரங்கன் நிலையிலக்கில்
அம்பென நானமிழ்ந்தே பிறப்பதனை ஒழித்தேனே

**அலர்மேல்மங்கா சமேத ஸ்ரீநிவாச பரப்ரஹ்மணே நம :**

பிறப்பொழித்தேன் என்றொருகால் உரைத்தவரின் பிறப்பொழித்து
தமதனைத்தும் அவர்தமக்கே வழங்கிய வடவேங்கடவா
அகலகில்லேன் என்றலர்மங்கை உறைந்திடும் நல்திருமார்வா
அகமொழிந்தேன் அடியார்க்கே அடியவனாய் ஆனேன் நான் !

**<u>பெருந்தேவி நாயிகா சமேத தேவாதிராஜ பரப்ரஹ்மமணே நம :</u>**

அடியவனாய் ஆக்கியெந்தன் அகமொழித்த அருளாளா
கடிமலராள் பிரியாத கச்சிநகர்க் கதிபதியே
நொடிப்பொழுதும் உனைமறவா வரமருள்வாய் வரதாவுன்
அடிப்பணிந்தேன் அடியேனை ஆட்கொண்டருள்வாயே !

**<u>கோமளவல்லி நாயிகா சமேத அபரியாப்தாம்ருத பரப்ரஹ்மமணே நம :</u>**

ஆட்கொண்டருள்வாய் ஆரமுதா அடியேனை
பாக்கொண்டு பதம்பணிந்த பாலகனிச் சிறியேனை
ஐந்தாயுதம் கொண்டாய் கோமளாங்கி மணவாளா
நான்காயிரம் நயந்தளித்த நாயகனே வணங்குகின்றேன் !

**<u>அம்ருதபலவல்லி நாயிகா சமேத யோக ந்ருசிம்ஹ பரப்ரஹ்மமணே நம :</u>**

வணங்கிய நல்லடியார்க்கு வானுலகம் அளித்திடுவாய்
மயங்கிய மனத்தவர்க்கு மாமருந்தாய் இருந்திடுவாய்
கலங்கியுன் திருமுன்னே கைதொழுதேன் திருக்கடிகையிலே
கடிகை மணித்துளியளவில் எனைக்காத்து அருள்வாயே !

**<u>ஸ்ரீபூமிநாயிகா சமேத லவண வர்ஜித பரப்ரஹ்மமணே நம :</u>**

அருள்வா யென்றவற்கு தனுக்குவமை இல்லாதான்
மருள்நீக்கும் மணியப்பன் முத்தப்பன் வானுலகப்
பொருளீயும் பொன்னப்பன் மற்றும் என்னப்பனுமாய்
இருளகற்றும் தன்னொப்பாரில்லப்பன் தாளடைவாய் மடநெஞ்சே !

**<u>செஞ்சு லக்ஷ்மி நாயிகா சமேத அஹோபில ந்ருசிம்ஹ பரப்ரஹ்மமணே நம :</u>**

நெஞ்சே நீயடைவாய் ஆதி நர சிங்கனிடம்
செஞ்சுகுலத் தினியளுடன் கோளரியான் உறையுமிடம்
எட்டோ டோன்றோபதாய் எட்டுடையான் திகழுமிடம்
சட்டென்றே துயர்தீர்க்கும் எம் சிங்கவேள் குன்றிடமே !

**<u>சிறு சிங்கவேள் குன்றம் - நான் உணர்ந்த நாமக்கல்</u>**

**<u>நாமகிரி தாயார் சமேத உக்ர ந்ருசிம்ஹ பரப்ரஹ்மமணே நம :</u>**

சிங்கப்பிரான் கோளரியாய் மாவரக்கன் மார்வங்கீண்டு
அங்கவன்கை உதிரச்சுவடேறி சென்ன்னிரத் தோடுறையும்
திங்களும் ஆதித்யனும் பிரமனும் சடயனுமேத்தும் - எம்
பங்கயக்கண்ணனை சிறு சிங்கவேட்குன்றம் காண்மினே !

**ருக்மிணி நாயிகா சமேத பார்த்தசூத பரப்ரஹ்மணே நம :**

காண்மின் காண்டறிய நெடிதுயர்ந்த நெடுமாலை
கேண்மின் நானிலத்தோர்க் கவனளித்த அருளமுதை
தொழுமின் வேதவல்லியோடுறையும் சாரதியின் அடியிணையை
எழுமின் நலந்தமில்லதோர் நாட்டில் அடியார்க்கடியராய் !

**கோமளவல்லி நாயிகா சமேத நித்யகல்யாண பரப்ரஹ்மணே நம :**

அடியார்க் கடியவனாய் தமதடிகள் அடைந்தவரை
கடிகைமணித்துளியளவும் நான்மறவேன் என்றுரைத்தவனை
பிடியோடு களிரேத்தும் திருவிடந்தை மறைப்பொருளை
பிடியிடயாள் உடனுறையும் நித்தியனை நினைநெஞ்சே !

**நிலமங்கை நாச்சியார் சமேத ஸ்தலசயன பரப்ரஹ்மணே நம :**

நினை நெஞ்சே, நீண்டவப் பெரியவாய கண்ணானை
பொன்னார்மேனியனாய் கண்டமுனி யுதித்த மண்ணாணை
அடங்கா கோளரியாய் அரக்கனகம் கீண்டானை
கடல்மாமல்லை கிடந்தானை தலசயனனைப் பணிந்து

**அணிமாமலர்மங்கை நாச்சியார் சமேத நீர்வண்ண பரப்ரஹ்மணே நம :**

பணிவாய் நீ நன்னெஞ்சே பாரேத்தும் பரமன்தன்னை
அணிமாமலராள் அணிந்துரையும் நீர்வண்ணன்தன்னை
நின்றானை கிடந்தானை இருந்தானை நடந்தானை
நீர்மலை யடைந்தே வணங்கு !

**ஹேமாப்ஜவல்லி நாயிகா சமேத தேவநாத பரப்ரம்மணே நம :**

வணங்கு மடியார்க்கு மெய்யனாம் எம்மையன்
அயனரனோடு தானுமாய் மூவராகி நின்றான்
தயரதன்மகனோடு பரிமுகனும் அருள் புரியும்
அயிந்தைநகர் அடைந்தார் உயர்ந்தாரே !

**கனகவல்லி நாயிகா சமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணெ நம :**

உயர்ந்தவர்க் குயர்ந்ததே உகந்தவா ரளிப்பவன்
அடைந்தவர் மனத்திலே அகமகிழ்ந் துறைபவன்
மடந்தையை மருவுடன் மார்விலே தரிப்பவன்
கிடந்தவுள் ளடைந்தவர்க் கிலைபிறப் புண்மையே !

**<u>பூங்கோவல் நாச்சியார் சமேத த்ரிவிக்ரம பரப்ரஹ்மணே நம :</u>**

உண்மையை இயம்புகேன் உலகெலாம் அளந்தவனை
திண்மயனை, தடந்தோளனை, எங்கும் நிறைந்தவனை
இம்மையும் மறுமையும் ஏழெழுமயும் ஒழித்தவனை
எம்சென்னியில் ஒப்பிலாத் திருவடி பதித்தவனை
ஒருவரோ டிருமுனி நெருக்கினில் உணர்ந்தவனை
திருமகளோ டுறைவிக்ரமனை கோவலூரில் கண்டேனே !

**<u>மதுரவல்லி நாயிகா சமேத வ்யூக சுந்தரராஜ பரப்ரஹ்மணே நம</u>**:

கோவலூர் நின்ற நெடுமாலை மூவருணர்ந்த பெருமானை
கூடல்நகர்க் கோவலனை அமர்ந்தருளும் அழகனை
பட்டருக்காய் பறவையேறிய பவித்திரனை பரமேட்டியை
தட்டாமல் தொழுவாய் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டேன்றே !

**<u>சுந்தரவல்லி நாயிகா சமேத சுந்தரபாஹுவே நம:</u>**

பல்லாண்டென்று பட்டர்பிரான் விரித்துரைத்த வேதமோதி

எந்நாளும் அவர்க்கடிமை நாமென்றே மிகவுணர்ந்து

பொன்மகள் சுந்தரவல்லி சுந்தரமா யுரைமார்வன்

சுந்தரபாஹுவை மாலிருஞ்சோலயில் காண் !

**<u>மோகனவல்லி நாயிகா சமேத காளமேக பரப்ரஹ்மணே நம:</u>**

கண்ணாரக் காண்மின் காளமேகன் திருவுருவம்
காதாரக் கேண்மின் அமுதீந்த அவன் சரிதம்
நெஞ்ஜாரமாய் மோகனவல்லி மோகித்துறையுமூர்
சஞ்சாரமாய் திருமோகூர் அடைந்தே.

அடைவாய் மடநெஞ்சே ஆப்தனுக் கருகருகே
மடைதிறந்தருளும் திகழ்திரு சக்கரத்தானெதிர்
தடந்தோள் மார்வம் கீண்ட யோக நரசிங்கனுரை
இடமாம் ஆனைமலை அடிக்கோவில்!

**<u>உஜ்ஜீவன நாயிகா சமேத மெய்யநாத பரப்ரஹ்மணே நம</u> :**

அடிக்கீழ் அமர்ந்து புகுந்த நல்லடியார்க்கு
நொடிக்குள் அருள்வான் எம்மீசன் மெய்யநாதன்
அரக்கர் மருள மெல்லணையான் சீற்றம்கொண்டே
இருக்குமிடம் மெய்யமலைத் தொழுநெஞ்சே

**அம்புஜவல்லி நாயிகா சமேத யக்ஞ வராஹப் பரப்ரஹ்மணே நம :**

தொழுவாய் விழுவாய் எழுவாய் மனமே
புழுவாய் பிணியாய் பிறவாய் தினமே
அழகாய் அறிவாய் விரியும் சுடராய்
மெழுகாய் உருகும் ஒளியை உடையாய்
எரியாய் புவியாய் நிலநீர் வெளியாய்
ஒன்றாய் பலவாய் யாதும் ஒன்றாய்
அரியாய் பரியாய் பன்றியின் உருவாய்
அறிவாய் அவனை முஷ்ணம் தனிலே !

**வஞ்சுளவல்லி நாயிகா சமேத நறையூர் நம்பி திருவடிகளே சரணம்**

தன்னுள்ளே என்னை யிட்டான் என்னுள்ளும் தானமர்ந்தான்
எந்நாளும் தன்னடியே விண்ணாளும் வழி யென்றான்
பொன்மகளே முதலென்றான் புள்ளூர்ந்தே புகழ்கொண்டான்
என்மனத்துறைவானவன் திருநறையூர் நின்றானே !

**சாரநாயிகா சமேத ஸ்ரீ சாரநாத பரப்ரஹ்மணே நம :**

நின்றானை நெடுமாலை மறையேத்தும் விழுப்பொருளை
நாயகனை நாரணனை நற்காவிரியாள் மடிதவழும்
மாயவனை மாதவனை மதிளிலங்கை குலமொழியச்
செற்றானை சேறைநகர்ச் சேர்ந்தே அறி !